விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்திய- சர்வோதய இலட்சியங்களுக் கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

மலர் 11 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 104) 1974 ஒகஸ்ட்-செப்டம்பர் | இதழ்— 11,12

# 80 ஆவது வினோபா ஜயந்தி

அருளொழுகும் இருகண்கள்
அறம் ஊறும் நன்னெஞ்சம்
இரு தோள்கள் மீதினிலே
எழில்கருமம் தானுறங்கும்
பொருளறியா மக்களுக்குப்
பொருள் கூறி பூமிதனில்
இருளகற்ற வந்துதித்த
இணையில்லாப் புரட்சி முனி



जन्मः ११-९-१८९५

செப்டம்பர் 11 ஆம் திகதி வினோபாவின் 80 ஆவது பிறந்ததினம். இத்தினத்தை பூமி ஜெயந்தியாகக் கொண்டாடுகிறோம். இது பூமாதேவி விடுதலையான தினம். கிராம மக்களை ஈன்ற ஒரே அன்னையாக பூமாதேவியின் காட்சியை நமக்குக் காட்டிய மகாபுருஷர் வினோபாஜி. கிராம பூமி அன்னைக்கு கிராம மக்கள் எல்லோரும் குழந்தைகளே. அவர்களுக்கு பாரபட்சமற்ற அன்பைப் பொழிகிறாள் பூமி அன்னை. யாரும் 'தனது' என்று பூமி அன்னையை விலங்கிடாமல் கிராமதானம் மூலம் ஒரு புதுவாழ்வை சித்திரித்துக் காட்டி வருகிறார் மகரிஷி வினோபாஜி.

மகாத்மா காந்தி மறைந்த பிறகு இருள் சூழ்ந்த நாட்டில் ஆத்மீக ஒளியுடன் 1948 இல் வினோபாஜி சர்வோதய சமாஜத்தைத் தோற்றுவித்தார். இதன் மூலம் மகாத்மா காந்தி அடிகளின் ஆயிரக்கணக்கான நிர்மாண ஊழியர்கள் சர்வோதய சிந்தனையுடன் இணைந்து செயலாற்ற வழி துலக்கியவர் வினோபாஜி.

பதினான்கு ஆண்டுகள் பாரத தேசம் முழுவதும் வினோபாஜி பாத யாத்திரை செய்தார். யாத்திரை செய்ய முடியாத உடல்நிலையில் பௌனாரில் பிரம்ம வித்தியா மந்திர் ஆசிரமத்தில் 1969 நவம்பர் முதல் தங்கி இயன்றளவு உடலுழைப்புச் செய்து கொண்டிருக்கிறார். துப்புரவு செய்வது அவருக்குப் பிடித்தமான வேலை.

வினோபாஜி உலகத்தில் உள்ள முக்கியமான சமய நூல்களை ஆராய்ந்து ஒவ்வொன்றின் சாரத்தையும் தொகுத்துள்ளார். அவைகள் பல அரிய நூல்களாக வெளிவந்துள்ளன.

அகிம்சையைச் சூட்சுமமாக, அதிநுட்பமாகப் பிரயோகிக்கும் ஆத்மீக முறையை ஆராய்ச்சி செய்து வருகிறார். சத்தியாக்கிரகத்தை ஒரு எதிர்ப்புக் கருவியாக இல்லாமல் எல்லோருக்கும் அன்பான ஆதரவான கருவியாக்க முயன்று வருகிறார்.

மழையோ, வெள்ளமோ, புயலோ அரசியல் வானில் எத்தகைய சிக்கலோ குழப்பமோ நேர்ந்தாலும் தன்னைப் பின்பற்றுபவர்கள் தொடர்ந்து வந்தாலும் வராவிட்டாலும் அவர் ஒரு கர்மயோகியாக தனது ஆத்மீக பலத்தால் கருத்துப்புரட்சிக்காக, மன மாற்றம் மூலம் சமுதாய மாற்றத்துக்காகத் தொடர்ந்து தவமாற்றி வருகிறார். மார்க்ஸ் தத்துவங்களைச் சொல்லிச் சென்றார். அதற்குச் செயல் உருவம் கொடுத்து புதிய ருஷ்யாவை உருவாக்கியபெருமை லெனினையே சாரும். அதுபோல சர்வோதய பக்தர்கள் வினோபாஜியின் தபோ சக்தியால் ஆத்ம ஒளி பெற்று, அவருடைய சக்திக் கதிர்களாக அவரது தத்துவத்தை வீடு தோறும் பரப்பி காந்திஜியின் கிராம சுயராச்சியக் கனவை நனவாக்கத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நம் தேசமும் உலகமும் அமைதியின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. மக்களின் விடுதலைக்கும், அமைதிக்கும் ஆன்மீக இன்பத்திற்கும் அறிவுச்சுடராக ஒளி காட்டி வரும் வினோபாஜிக்குப் பூரண ஆயுளை அளிக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜெய் ஜெகத்!

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி; 254

கிளிநொச்சி

காந்தி ஆண்டு 104

1974 ஒகஸ்ட் - செப்ரெம்பர்


## நட; நட; நடந்து கொண்டேயிரு

இது விநோபாஜியின் மந்திர வாக்கியம். பிரம்ம வித்தையை அறிவதற்கு மிக உறுதிப்பாடான வாக்கியம். இது முற்றிலும் உண்மை. தில்லையில் ஆடும் நடராசனும் நடமாடுபவன் தான். நடத்தல் போதாதென்றே நடராசன் ஓயாது நடனமாடிக் கொண்டிருக்கின்றான்.

இப்பொழுது இலங்கையில் பாத யாத்திரை மேற்கொண்டிருக்கும் நாலு இந்தியப் பெண்மணிகளைப் பற்றி யாவரும் அறிந்திருப்பார்கள். செல்வி லட்சுமி, நிர்மல், ரீஜ்வானி, ஹேம் என்பவர்களே அவர்கள். இவர்கள் நால்வரும் பிரம்மச்சாரிணிகள். கல்வியறிவும் அனுபவ அறிவும் உடையவர்கள். இவர்கள் பாத யாத்திரை மேற்கொண்டாலும் உலோக யாத்திரை என்றே இதனை மேற்கொண்டுள்ளார்கள். இந்தியாவோடு நின்றுவிடாமல் இலங்கை, பர்மா இரண்டையும் நிகழ்ச்சியில் சேர்த்திருப்பதால் உலோக யாத்திரை என்று கூறியுள்ளார்கள்.

இந்த உலோக யாத்திரையில் மூன்று முக்கிய தத்துவங்கள் அடங்கியுள்ளன முதலாவது, இதில் பிரமச்சாரிணிகள் மட்டும் அடங்கியுள்ளனர். ஆதலின் இது பெண் சக்தியின் புத்தெழுச்சியை முதன் முதலாகக் குறிக்கின்றது. எவ்வளவு தான் நாங்கள் ''ஓம் சக்தி ஓம் சக்தி'' என்று கூவிக் கதறினாலும் பெண்கள் இன்றும் ஆண்களை அண்டி, அவர் பொருளாதார ஆதிக்கத்தில் அடிமைப் பட்டுள்ளனர். இந்த நிலைமையில் ஒரு புரட்சியை உண்டாக்க வேண்டுமென்பது இந்த யாத்திரையின் நோக்கம். நாட்டின் பல பாகங்களிலும் பெண்கள் இன்னும் பூரண சுதந்திர வாழ்வில்லாதவர்களாய் போகப் பொருள்களாய் இருக்கும் அவலநிலையை நேரில் கண்டு அறிவுரைகள், அனுபவ உதாரண முறைகள் மூலம் மாற்றுவது இம் முதற் கட்டத்தின் முக்கிய அமிசம்.

இரண்டாவதாக, நாம் இங்கு பெண்கள் சாத்துவத்தை, விடுதலையை பட்டும் நாட்டி விட்டால் போதாது. பெண்களுள் பிரதமமந்திரிகள் பட்டும் தோன்றி விட்டால் போதாது. பெண்களுள்ளும் பிரம்ம வித்தையில் சிறந்தவர்களாய் சங்கராச்சாரியாரைப் போன்றவர்கள் தோன்ற வேண்டும் என்பது விநோபாஜி அவர்கள் கருத்து. சமத்துவம் என்பது எண்ணம் அளவில் நின்றுவிட்டால் போதாது. சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலைகளாலும் ஒரு பெண் உயர்நிலைக்கு வந்துவிட்டால் பெண் விடுதலை நாட்டில் உண்டாகி விட்டது என்று கருத்துக் கொள்ளக் கூடாது. ஆத்மார்த்த துறையிலும், கல்வித் துறையிலும் பெரும்பான்மையான முறையில் இவர்கள் மேனிலை அடைய வேண்டும். பக்தியுடன் சேவை செய்பவர்களாய், திருமணமே பெண்களின் குறிக்கோள் என்ற நிலைமையை மாற்றுவதற்கு நல்நெறியில் நின்று புரட்சி செய்யக் கூடிய ஆன்ம பக்குவமுடையவர்களாயும் விளங்க வேண்டும். இந்தப் பக்குவ நிலை தான் பெண்களின் விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் உண்மை ஆதாரமாக அமையும்.

மூன்றாவதாக நடமாடித் திரிவதாலாகும் பயன் உலக ஒற்றுமையாகும். தனியே ஒரு குடும்பத்திற்குள் அடிபட்டு இயல்பாக உள்ள குணங்குறைகளுடனும் மக்கள் வாழ்ந்து மடிந்து விடுகிறார்கள். மனிதன் சமூகமாக வாழ வேண்டிய பிராணி. நடமாடுவதால் அவன் உடலும் உள்ளமும் சூழலைத் தழுவுகின்றன. இது ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவாகும். நடமாடல் இருபாலாரினதும் புறத் தொடர்பை விரிவாக்குகின்றது. தம் குணங்களை மற்றையவர்க்கு வெளிப்படுத்தவும், தம் குறைகளை மற்றையவர் நிறை கண்டு நிவிர்த்தி பண்ணவும் இந்த நடமாடி வரும் தொடர்பு பெருவளவில் உதவியாய் நிற்கும்.

மக்களோடு மக்கள் கொள்ளும் தொடர்பாடல்கள் பல. கடிதம், வானொலி, பத்திரிகை, புத்தகம், தொலைக்காட்சி, சினிமா என்பன போன்றவை பல. இவை ஒரு சிறுமட்ட, ஒருதரத் தொடர்பாடலையே தரவல்லன. இன்னும் இவை உள்ளத்தின் ஒரு பகுதியை மட்டும் தொடுவன. நிலையான உணர்வுகளை நம்மில் தேக்கி வைக்கக் கூடியவை அல்ல. ஆயின் நடந்து கொண்டே நாம் உலக யாத்திரையை மேற்கொள்ளும் பொழுது பல மொழி பேசும் மக்களை, பல் வகைத் தொழில் செய்யும் மக்களை, பல் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்போரை நேருக்குநேர் சந்திக்கின்றோம். இதனால் பரஸ்பர தாக்கங்கள் நடைபெறுகின்றன. மக்கள் ஒரு குலம் என்னும் உணர்வும், அயலார் மாட்டுப்பரிவும் ஏற்படுகின்றன. எங்களிடமுள்ள தற்பெருமையும் செருக்கும் அழியும். மற்றையவர் இன்பதுன்பங்களில் பங்கு கொள்ளும் பாங்கு மிகுந்து பரிவு பெருகும். அடிப்படையில் மனிதகுலம் ஒன்றே என்னும் அனுபவ அறிவு அழுத்தமாக மனதில் பாயும். நம்மை அறியாமலே மக்கள் குலத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்ற மனம் துடிக்கும். சொத்தின் அடிப்படையாலோ, அறிவுடைமையின் அடிப்படையாலோ, ஒழுக்க நெறியின் அடிப்படையாலோ எந்த வகையாலும் வந்த ஏற்றத் தாழ்வுகளை நீக்க எம் மனம் துடிக்கும். அப்பொழுது தான் எம் மனதில் ஆண்டவனின் விஸ்வரூப தரிசனம் கிடைக்கும். நடந்து கொண்டே இருப்பதால் எழும் பெரும் பயன் இதுவே.

நட; நட; நடப்பதால் இரத்த ஓட்டம் சுத்தமாகும். உடலுறுதியாகும். மனித சக்தியில் நாம் ஒன்று படுவோம். நான் எனும் தனி அகம்பாவம் அழியும். சர்வோதயக் கிரியைகளுள் இது ஒரு சிறந்த அமிசமாகும். நட; நட; என்பதற்காகவன்றோ எம்மிறைவன் சித் ஆகாசமான தில்லையுள் ஒரு காலைத் தூக்கி நின்று நடமாடிக் கொண்டிருக்கின்றான்.

நட; நட; நடந்து கொண்டேயிரு.

— இ. இ

# உலோக யாத்திரை

நம் நாட்டின் மரபிற்கேற்ப நடந்தே நாடு முழுவதும் சுற்றி பெண் சக்தி எழுச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் லட்சுமி, நிர்மல், ரிஜ்வாணி, ஹேம் ஆகிய பிரமச்சாரிணி சகோதரிகள் நால்வர் கடந்த ஏழு ஆண்டுகளாகப் பாரதத்தில் பாதயாத்திரையை மேற்கொண்டு சென்ற ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி தலைமன்னார் வழியாக இலங்கைக்கு வருகை தந்து யாத்திரை செய்து கொண்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள்.

தொடர்ந்து மொத்தம் பன்னிரண்டு ஆண்டுகள் நடந்தே பாதயாத்திரை செய்வது இவர்களுடைய திட்டம். மத்திய பிரதேசத்திலிருந்து 25. 10. 1967 ஆம் திகதியிலிருந்து புறப்பட்ட இவர்கள் ஏழு ஆண்டுகளாக 10 மாநிலங்களில் மொத்தம் 95 மாவட்டங்களில் 13,300 மைல்கள் யாத்திரை செய்து 1750 ஊர்களில் தங்கியுள்ளனர்.

சகோதரிகள் நால்வரும் கல்வியறிவும் அனுபவ அறிவும் மிக்கவர்கள். பௌனர் ஆசிரமத்தில் தங்கி விநோபா அடிகளிடம் நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்கள்.

இந்தியாவில் பிரம்மவித்தை மிகவும் மேலோங்கி இருக்கிறது. ஆனல் அதில் மாதர்களின் பங்கு மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. இப்போது பெண்களும் பிரம்ம வித்தை என்னும் களத்தில் முன் வர வேண்டும். இதற்காகவே விநோபாஜி நான்கு சகோதரிகளையும் உலக யாத்திரையில் ஈடுபடச் செய்தார்.

யாத்திரையின் அமைப்பு, கலாசார அடிப்படையிலும் ஆன்மீக அடிப்படையிலும் அமைந்துள்ளது மட்டுமல்லாமல் பெண் சக்தி எழுச்சி, உலக ஒற்றுமையை உணரச் செய்வது, பிரம்மவித்தையைப் பரப்புவது, புரட்சிச் செய்தியை அறிவிப்பது உலக மக்கள் நலனைப் பற்றி நாள் தோறும் எண்ணி எண்ணி இந்த விஷயங்களை மக்களுக்குத் தெரிவிப்பது சத்தியம் - அன்பு - கருணை ஆகியவைகளைச் சமூகத்தில் வெளிப்படச் செய்வது ஆகிய புனித நோக்கங்களையும் கொண்டதாயுள்ளது.

## லட்சுமி

அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்தவர். பதினறு வயதில் மக்கள் சேவை என்னும் தீட்சை எடுத்துக் கொண்டார். இவர் 1962 இல் விநோபாஜி ஆரம்பித்த மைத்திரி ஆசிரமத்தில் ஐந்தாண்டுகள் பயிற்சிபெற்ருர். தாயாரைச் சந்திக்காமலேயே பன்னிரண்டு வருட பாத யாத்திரைக்குப் புறப்பட்டார்.

## நிர்மல்

லாகூரிலுள்ள பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தவர். எம். ஏ; எல். எல். பி. படித்தவர். திருமணப் பேச்சு எழுந்த போது, ''நான் ஒரு போதும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்; ஒரு போதும் இல்லை'' என பிரதிக்ஞை எடுத்து தேச சேவையில் இறங்கினுர். ''லோக யாத்திரை மனதிலுள்ள மாசுகளைக் கழுவுவதற்கும் அகங்காரத்தைக் களைவதற்கும் உதவிக் கொண்டிருக்கிறது'' என்று சொல்கிருர்.

## ரிஜ்வாணி

சிந்து மாகாணத்தில் பிறந்தவர். எம். ஏ. பட்டம் பெற்றவர். பாதயாத்திரையின் போது ஒரு நாள் காலையில் பாம்பு கடித்து விட்டது. உடல் முழுவதும் விஷம் பரவியது. சிகிச்சை மூலம் குணமடைந்ததும் தொடர்ந்து பாத யாத்திரையிலீடுபட்டார். ''பிரமச்சரியம் எளிதாகக் கைகூடியது. ஆசைகள் அனைத்தும் அறுந்தன''. என்று கூறுகிருர்.

## ஹேம்

இவர் விநோபாஜியின் பாதயாத்திரைத்திட்டத்தைச் செயற்படுத்தும் தலைவி. ஹேம் என்ருல் பொன். இவரது கருத்துக்களும் பொன் போன்றவை. கொளஹாதி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். குஜராத்தில் பாத யாத்திரை செய்த போது திடீரென நோய் வாய்ப்பட்டார். புற்று நோய் எனச் சந்தேகம் எழுந்தது. சிகிச்சையின் பின் புற்று நோய் இல்லை எனக் காணப்பட்டது. ''நாம் சமூகத்திற்கு அர்ப்பணமாய் விட்ட பிறகு உண்பதற்கும் உடுப்பதற்கும் சமூகத்திலிருந்தே எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்பது இவரது கருத்து.

---

# தென்னை, பனைவெல்ல உற்பத்தி

கள் உற்பத்திச் சங்கங்களும் தவறணை அமைப்புகளும் தங்கள் உற்பத்தியில் ஐம்பது வீதம் பதநீர் உற்பத்தி செய்து வெல்லமும் சீனியும் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான உதவிகளையும் ஊக்கத்தையும் அளிப்பதற்கான வழிவகைகளை உடனடியாக மேற் கொள்ளுமாறு மாண்பு மிகு நிதி அமைச்சர் - கலாநிதி. என் .எம். பெரேரா அவர்களைக் கோருவதெனக் காந்தி சேவா சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

# லோக பாதயாத்திரைச் சர்வோதய சகோதரிகள்
## இலங்கையில் ஆற்றிய சொற்பொழி வின்சுருக்கம்

1. இலங்கையில் கல்வி முறை காந்திய அடிப்படையில் மாற்றஞ் செய்யப்படுமானல் மிகவும் பயனுடையதாய் இருக்கும்.

2. அழிவற்ற நித்தியமான சத்தியத்தை மறந்து நாம் அசத்தியத்தில் ஒழுகினுல் உயிர் வாழ முடியாது. சத்தியமே உயர்ந்தது. அதனலேயே அதற்குப் பல சோதனைகள் ஏற்படுகின்றன. ஆனல் அச் சோதனைகளின் முடிவு சத்தியத்தின் நித்தியத்தை நிச்சயப்படுத்துவனவாகவே அமைந்துள்ளது. சர்வோதய வாழ்வும் விடிவும் இதுவே.

3. சேவை செய்வதின் மூலமே மக்கள் மனம் விரிவடையும். சமுதாயத்தில் அன்பும் ஆனந்தமும் உண்டானல் சமுதாய ஒருமைப்பாடு ஏற்பட்டு உலகமும் ஒன்ருகி விடும். நாமெல்லோரும் மனிதர்கள் என்ற மனப்பான்மை எமக்கிருக்குமாயின் எம்மிடையே எவ்வித பிரச்சனைகளுக்கும் இடமிருக்காது.

4. அன்பும், சகோதரத்துவப் பண்பும் ஒரு சமுதாயத்தில் நிலை பெறும் போது அங்கு எவ்வித இன்னல்களுக்கும் இடமேற்பட முடியாது. உலக மக்களிடையே சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவ வேண்டும். நாமெல்லோரும் ஒரு குடும்பத்தவர் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். சர்வோதயக் கருத்துக்கள் உலகெங்கும் பரவி ஒளி கொடுக்கும் போது தான் உண்மையான, சமத்துவமுள்ள, சுதந்திரமுள்ள மக்களாக நாமனைவரும் வாழ முடியும்.

5. சிங்களமும் தமிழும் இருகண்கள் போன்றவை. ஆங்கிலம் மூக்குக் கண்ணுடி போன்றது. எனவே இரு மொழிகளையும் படித்து பின் ஆங்கிலத்தையும் படிப்பதால் நம் உலக நோக்கு என்னும் பார்வை மிகத் தெளிவாகும்.

---

## அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

14. 07. 74 இல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற 25 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப் பெற்ற புது நிர்வாக சபையினர்.

தலைவர்
திரு. இ. கந்தையா
உபதலைவர்கள்
திரு. சோ. நடேசன். கியூ. ஸி.
டக்டர். வி. ரி. பசுபதி
பொதுச் செயலாளர்
திரு. சி. க. வேலாயுதபிள்ளை
உதவிச் செயலாளர்
திரு. சோ. க. தம்பிப்பிள்ளை
பொருளாளர்
திரு. க. மயில்வாகனம்
நிர்வாகசபை உறுப்பினர்
முதலியார். செ. சின்னத்தம்பி
டக்டர். கே. சிவஞானரத்னம்
வித்துவான். நா. சிவபாதசுந்தரன்
பண்டிதர். செ. சிவலிங்கம்
திரு. சிசு. நாகேந்திரன்
திரு. கே. தனபாலசிங்கம்
" பி. சண்முகராசா
" ச. சபாபதி
திருமதி. புஷ்பராணி - கந்தசாமி

---

## வெள்ளி விழா பேச்சு, கட்டுரை போட்டிகள்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் 25 ஆண்டு நிறைவை யொட்டி வெள்ளி விழா — பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. இப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவர்கள்,

பொதுச் செயலாளர்,
காந்தி சேவா சங்கம்,
உருத்திரபுரம்.

என்னும் முகவரியில் எழுத்து மூலமோ, நேரிலோ விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## காந்தி சேவா சங்கம் கொழும்புக்கிளை

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 06. 10. 74 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 4 மணிக்கு பம்பலப்பிட்டி - இந்து கனிஷ்ட பாடசாலையில் நடைபெறும்.

---

## சம்பத்துத்தான அன்பர் மறைவு

வெள்ளவத்தை - விவேகானந்த வீதியில் வசித்த திரு. கே. பேரம்பலம் இயற்கை எய்தினர். அன்னரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிருேம்.

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.